**மதவாச்சி பிரதேச சபை - 2023**

**-----------------------------------------------------**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

மதவாச்சி பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மதவாச்சி பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந் நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும். என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பணம் செலுத்தியாராத போதிலும், ரூபா 197,000 இனால் பொருத்துக்கள் மற்றும் சொத்துக்கள் அதிகரித்திருந்தமை கடன் கொடுத்தோர் மற்றும் மூலதன மானியமாக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பது | இந்த சொத்துக்களுக்கு பணம் செலுத்தியிராததுடன், சொத்துக்கள் |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது வீதிகள், பாலங்கள் மற்றும் கால்வாய் பெறுமானத் தேய்வு ரூபா 973,709 ஆன போதிலும், விரிவான வருமானக் கூற்று மற்றும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் ரூபா 1,071,762 ஆக அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பது | சரியான பெறுமதிகள் கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் மின்சார உபகரண பொருத்தல் பெறுமானத் தேய்வு ரூபா 433,184 ஆன போதிலும், விரிவான வருமானக் கூற்று மற்றும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் அது ரூபா 390,399 ஆக குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பது | சரியான பெறுமதிகள் கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஈ) | அரச வங்கியொன்றில் பேணிச் செல்லப்படும் நிலையான வைப்புக் கணக்கொன்றிலிருந்து பெற வேண்டியவ ட்டி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 1,148,352 ஆன போதிலும், அது ரூபா 1,191,986 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | வங்கியால் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 169,631 தொகையான வட்டி கணிப்பிடப்பட்டிருந்தது. | சரியான பெறுமதி கணக்கு வைக்கப்பட வேண்டும். |

## 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக பெற வேண்டிய கடை வாடகை வருமானம் ரூபா 3,207,688 ஆன போதிலும், கடை வாடகைப் பதிவேட்டின் பிரகாரம் அது ரூபா 2,972,328 ஆனமையால் ரூபா 235,360 ஆன வேறுபாடொன்று நிலவியது. | நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள மீதிகள் சரியானது என்பது மற்றும் பட்டோலைகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | வேறுபாட்டுக்கான காரணங்களை கண்டறிந்து திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்வுக்கு எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை

| | விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்று | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | வீதிப் பயன்பாட்டுக் கட்டண வருமானம் | 1,270,000 | (i) நாளதுவரையாக்கப்பட்ட வருமானப் பதிவேடுகள்<br>(ii) மதிப்பாய்வுச் சபை அறிக்கைகள்<br>(iii) விண்ணப்பக் கோவை | அந்த மீதிகளை எதிர்காலத்தில் சான்றுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சான்றுபடுத்தல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | விளம்பரப் பலகை வருமானம் | 199,450 | -மேற்படி- | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | மாடுகளை வெட்டுதல் வருமானம் | 40,230 | -மேற்படி- | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | வாகனங்களை வாடகைக்கு வழங்கியமைக்கான வருமானம் | 307,900 | -மேற்படி- | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | நெநசல வருமானம் | 821,650 | -மேற்படி- | -மேற்படி- | -மேற்படி- |
| (ஊ) | இருப்பிற்காக உபகரணங்களை நிர்மாணித்தல் | 749,306 | (i) மதிப்பாய்வுச் சபை அறிக்கைகள்<br>(ii) விரிவான பட்டோலைகள்<br>(iii) மதிப்பாய்வுச் சபை அறிக்கைகள் | அந்த மீதிகளை எதிர்காலத்தில் சான்றுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சான்றுபடுத்தல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (எ) | ஏனைய பெற வேண்டியவை 01 | 20,605 | -மேற்படி- | -மேற்படி- | -மேற்படி- |
| (ஏ) | பெற வேண்டிய ஏனைய வருமானம் | 2,211,238 | -மேற்படி- | -மேற்படி- | -மேற்படி- |
| (ஐ) | பெற வேண்டிய உடைத்து அகற்றப்பட்டமைக்கான கடை வாடகை | 678,474 | (i) விரிவான பட்டோலைகள்<br>(ii) வயதுப் பகுப்பாய்வு | -மேற்படி- | -மேற்படி- |
| (ஒ) | பெற வேண்டிய குழாய் கிணறுக் கட்டணம் | 575,000 | -மேற்படி- | -மேற்படி- | -மேற்படி- |
| (ஓ) | பெற வேண்டிய விளம்பரப் பலகை வருமானம் | 638,550 | -மேற்படி- | -மேற்படி- | -மேற்படி- |

### 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டம், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவு (ஈ) பந்தி | வருமான சேகரித்தல், வாகன அப்புறப்படுத்தல், வாகன பழுதுபார்த்தல் மற்றும் சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல் தொடர்பில் ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாடொன்று நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திற்கு இணங்க வேண்டும். |
| (ஆ) | 1988 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய உப விதியின் 20 ஆம் உப விதி | இறைச்சி மற்றும் மீன் வியாபாரத்தை முறைமைப்படுத்த வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. | முக்கியமான அங்கீகரிக்கப்பட்ட உப விதிகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,653,158 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 11,835,280 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் கடந்த ஆண்டிற்குரிய மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான வழி | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட் ட வருமானம் | திசெம்பர் 31 ஆம் திகதியில் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 ஆம் திகதியில் மொத்த நிலுவை |
| | | ரூபாய். | ரூபாய். | ரூபாய். | ரூபாய். | ரூபாய். | ரூபாய். | ரூபாய். | ரூபாய். |
| (i) | வீத வரி மற்றும் வரி | 4,498,664 | 4,738,766 | 3,371,917 | 6,300,713 | 4,024,692 | 4,501,647 | 3,590,980 | 4,933,864 |
| (ii) | வாடகை | 33,136,907 | 16,578,785 | 8,298,358 | 35,796,001 | 23,069,415 | 18,328,055 | 11,378,639 | 27,515,574 |
| (iii) | அனுமதி பத்திர கட்டணம் | 519,027 | 427,200 | 427,200 | 90,500 | 361,730 | 502,683 | 502,683 | 90,500 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 12,275,818 | 12,575,582 | 12,087,886 | 15,918,472 | 13,246,712 | 20,503,417 | 21,768,719 | 15,430,776 |
| | | 50,430,416 | 34,320,333 | 24,185,361 | 58,105,686 | 40,702,549 | 43,835,802 | 37,241,021 | 47,970,714 |

### 2.2.2 வருமான சேகரிப்பு செயலாற்றுகை

சபையின் வருமான சேகரிப்பு செயலாற்றுகை தொடர்பான அவதானிப்புகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வீதவரியும் வரியும்** | | |
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியளவில் மொத்த நிலுவை வீதவரியிலிருந்து 81 சதவீதமான ரூபா 5,563,864 அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பது. | நிலுவை வீதவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | பல வருடங்களாக முன்கொண்டுவரப்படும் ரூபா 231,750 தொகையான கைத்தொழில் வரி நிலுவையை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | அறவீடுகள் துரிதமாக மேற்கொள்ள வேண்டும். |

**(ஆ) வாடகை**

| | | | |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக சபைக்கு சொந்தமான 100 கடைகளுக்கு உரியதாக பெற வேண்டிய கடை வாடகைகளிலிந்து 88 சதவீதமான ரூபா 29,971,165 தொகையான வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை கடை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | சபைக்கு சொந்தமான சொத்துக்களை குத்தகைக்கு வழங்கியமையால் 2023 ஆம் ஆண்டுக்கு முன்னர் அறவிடப்பட வேண்டிய ரூபா 451,908 மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிலுவை பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | சபைக்கு சொந்தமான இயந்திரங்களை வாடகைக்கு வழங்கியமையால் 2021 ஆம் ஆண்டுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 136,250 தொகை மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு எழுத்துமூல அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது என்பது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(இ) அனுமதிப்பத்திரக் கட்டணம்**

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அறிவித்தல் பலகைக் வருமானம் ரூபா 439,100 தொகையும், அனுமதிப்பத்திரக் கட்டண வருமானம் ரூபா 761,750 தொகையும் அறவிடப்பட்டிராததுடன், அந்த தரப்பினர் தொடர்பான விபரங்கள் சபையிடம் காணப்படவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(ஈ) ஏனைய வருமானங்கள்**

| | | | |
|---|---|---|---|
| | மாகாண சபையின் பிரதம செயலாளரினதும், ஏனைய உத்தியோகத்தர்களினதும் 2023 | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | அறவிடப்பட வேண்டும். |

திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 3,100,361 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 2,000,000 தொகையும் பெற வேண்டியதாக காணப்பட்டதுடன், 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுக்குரிய முத்திரைக் கட்டணமும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது நெடுஞ்சாலைகள் மற்றும் கிளை வீதிகள் தொடர்பான காரணிகளை முறைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல், மக்களின் நன் நடத்தை, வசதிகள் மற்றும் நலன் ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டி இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட காரணிகள் கீழே தரப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகளை விதிக்க முடியுமாக இருந்த போதிலும், 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்த விடயங்களுக்காக உப விதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. | உப விதிகளை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மதவாச்சி வாசிகசாலையில் காணப்பட்ட 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தொலைந்து போயிருந்த ரூபா 99,171 பெறுமதியான 615 வாகனங்கள் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர் இனங்காணப்பட்டு அந்த நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வியாபார அனுமதிப்பத்திர, வர்த்தக வரி, தொழிற்சாலை வரி மற்றும் விளம்பரப் பலகை வருமானம் ஆகியவற்றை அறவிடுவதற்று 2022 ஆம் ஆண்டின் போது சபையின் அதிகாரப்பிரதேசத்தில் மதிப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிராத காரணத்தால் குறித்த நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கட்டணங்கள் சரியாக இனங்காப்பட்டிருக்கவில்லை. | குறித்த மதிப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது என்பது. | வருடாந்த மதிப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருமானத்தினை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டின் போது நீர் வழங்கல் சபைக்கு ரூபா 2,343,240 செலத்தப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட பிலிசரு அலகின் எதிர்திசை சவ்வூடுபரவல் (RO) நிர் சுத்திகரிப்பு நிலையம் செயலிழந்தமையால் அதன்மூலம் எதிர்பார்த்த நோக்கங்கள் அடையப்படவில்லை. | இந்த செயல்படாத நீர் சுத்திகரிப்பு நிலையம் வேறொரு இடத்தில் நிறுவப்பட உள்ளது. | குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் செயல்படத் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும். |
| (இ) | வருடாந்தம் குத்தகைக்கு வழங்கப்படக்கூடிய சபைக்கு சொந்தமான ஆதனங்களுக்காக இடங்கள் ஒழுங்கமைக்கப்படாத காரணத்தால் சபைக்கு வருமானம் பெற்றுக்கொள்ளக்கூடிய சந்தரப்பம் இழக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இடங்கள் ஒழுங்கமைக்கப்பட்டு குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | இடங்கள் ஒழுங்கமைக்கப்பட்டு குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா 28,344,077 தொகையான கடந்த வருடங்களுக்கு உரிய வீதவரி மற்றும் வாடகை நிலுவை வருமானம் ஆகியவற்றில் 41 | கைத்தொழில் வரி மற்றும் வர்த்தக வரி ஆகியவற்றில் 80 சதவீதத்தினை விஞ்சி சேகரித்தலை அடிப்படையாக கொண்டு | நிலுவை வீதவரி மற்றும் வாடகை அறவிடப்பட்ட பின்னர் மாத்திரம் ஊக்குவிப்புப் படிகள் செலுத்தப்பட |

| | | |
|---|---|---|
| சதவீதமான ரூபா 13,161,228 சேகரிக்கப்பட்டிராத போதிலும், நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்காக 04 உத்தியோகத்தர்களக்கு ரூபா 49,642 ஆன படிகள் செலுத்தப்பட்டிருந்தது. | இந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்தப்பட்டுள்ளது என்பது. | வேண்டும். |

## 3.4 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முறையான பெறுகை நடைமுறையொன்று பின்பற்றப்படாது மற்றும் சபையின் அங்கீகாரமின்றி மதவாச்சி புதிய பொதுச் சந்தை கட்டிடத் தொகுதியின் 02 கடைகளை நிர்மாணிக்கும் அடிப்படையில் இரு நபர்களுக்கு 13 வருடங்களுக்கு குத்தகை உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டு வழங்கப்பட்டிருந்த போதிலும், விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவி ல்லை. | கடைகள் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கு விடயத்திற்கு பொறுப்பாக அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளபட்டிருந்தது . |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு செந்தமான 251-6989 இலக்கமுடைய கெப் வண்டி 2021 ஆம் ஆண்டின் போதும், LF-4797 ஆம் இலக்கமுடைய மஹேந்திரா பொலேரோ வாகனம் 2022 சனவரி மாதத்தில் பெறுகை நடைமுறையினை பின்பற்றாது தனியார் கராஜ் ஒன்றுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்ததுடன், பழுதுபார்க்கப்படாது ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாத நிலையில் கழற்றி அகற்றப்பட்ட உதிரிப்பாகங்களுடன் 2023 ஆம் ஆண்டின் போது மீண்டும் சபைக்கு | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | இந்த வாகனங்கள் குறித்து இயந்திரப் பொறியியலாளர் ஒருவரிடம் அறிக்கை பெற்று, பழுதுபார்ப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், பொறுப்பான தரப்பினரிடம் இருந்து சபைக்கு ஏற்பட்ட நஷ்டத்தை வசூலிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொண்டுவரப்பட்டிருந்தது. இந்த வாகன பழுதுபார்த்தல் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | பயன்பாட்டு நிலையில் காணப்படும் மோட்டார் சைக்கிள் ஒன்று மற்றும்நீர்த்தாங்கியொன்று பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்படாது அல்லது கைத்தவிர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் ஏலமிட நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சம்பந்தப்பட்ட வாகனங்களின் நிலைக்கேற்ப ஏலம் மற்றும் பழுது நீக்கப்பட வேண்டும். |

### 3.6 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| குறித்த வருடத்தில் சபைக்கு சொந்தமான வாகனங்களை பழுதுபார்ப்பதற்காக ஒரு தனியார் நிறுவனம் மட்டும் தெரிவு செய்யப்பட்டு அந்த நிறுவனத்திற்கு ரூபா 6,522,290 செலுத்தப்பட்டிருந்தது. அந்த பெறுகைகள் குழுவில் மூன்று உறுப்பினர்கள் மற்றும் இரண்டு உத்தியோகத்தர்கள் உள்ள போதிலும், ஒரு உத்தியோகத்தர் மாத்திரம் குழு கூட்டங்களில் பங்குபற்றியிருந்தனர். | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. | அனைத்து குழு உறுப்பினர்களும் பங்கேற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக | 2024 ஆம் ஆண்டின் போது இந்த 76 பணிப்பொறுப்புகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | திட்டமிடப்பட்ட பணிகளை ஆண்டினுள் நிறைவேற்ற |

| | | |
|---|---|---|
| காணப்பட்ட 179 பணிப்பொறுப்புகளில் 76 நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4.1 சுற்றாடல் பிரச்சினைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்ளூராட்சி சபைக்கு சொந்தமான கழிவு முகாமைத்துவ நிலையம் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அது செயற்படாத காரணத்தினால் சேகரிக்கப்படும் கழிவுகள் இசின்பஸ்ஸகல காப்புக்காட்டில் உள்ள குழிகளில் கொட்டப்பட்டு வருகின்றது. | நெருப்பு வைக்கப்படாததுடன், குழிகளினுள் கொட்டப்படுகின்றமை. | மக்காத குப்பைகளை முறையாக அகற்ற வேண்டும். |